18-12-2024.
O.S.No. 297/2022

வா. சா. 1 ராமசாமி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் கார், டிராவல்ஸ் வைத்து தொழில் செய்து வருகிறேன். ஒரு வண்டி வைத்துள்ளேன். நான் 8ம் வகுப்புவரை படித்துள்ளேன். அதை தவிர தோட்டம், வீடு உள்ளது. சுள்ளெறும்பு கிராமத்தில் என் பெயரில் 1.1/2 ஏக்கர், என் மனைவி பெயரில் 1.1/2 ஏக்கர் உள்ளது. சர்வே எண் ஞாபகமில்லை. என் மனைவி பெயரில் உள்ள சொத்தை நான் கிரையம் செய்துவிட்டேன். என் பெயரில் உள்ள சொத்து உள்ளது. என் மனைவி பெயரில் உள்ள சொத்தை ஒட்டன்சத்திரத்தைச் சேர்ந்த பாரதி என்பவரின் மனைவி பெயருக்கு விற்றேன். பிரதிவாதி என்னிடம் ரூ.20 லட்சம் கடன் பெற்றார் என்பதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி சுமார் 3 வருடத்திற்கு முன்பு கடன் வாங்கினார். என் மனைவி பெயரில் உள்ள தோட்டத்தை விற்று பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். எவ்வளவு தொகைக்கு விற்றேன் என்றால் ரூ.20 லட்சத்திற்கு விற்றேன். எந்த தேதியில் விற்றேன் என்றால் பிரதிவாதிக்கு பணம் கொடுப்பதற்கு சுமார் 3 மாதத்திற்கு முன்பு விற்றேன். நான் வருமானவரி கட்டுவது கிடையாது. என் மனைவிபேரிலும், என் பேரிலும் வங்கி கடன் உள்ளது. சாலையூர் நாலுரோட்டில் உள்ள IOB வங்கியில் கணக்கு உள்ளது. வேடசந்தூர் சிட்டி யூனியன் வங்கியில் கணக்கு உள்ளது. பிரதிவாதிக்கு வங்கி கணக்கில் இருந்து எடுத்து கொடுக்கவில்லை. கையில் வைத்திருந்ததை கொடுத்தேன். பிரதிவாதி எனது பெரியமாமனார் மகன். எனது மாமியாரும் பிரதிவாதியின் மனைவியும் உடன் பிறந்தவர்கள். எந்தக்காலத்திலும் பிரதிவாதி என்னிடம் ரூ.20 லட்சம் கடன் பெறவில்லை என்றும், எந்தவித புரோநோட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியினுடையது இல்லை என்றும் அதில் உள்ள கைரேகை பிரதிவாதியினுடையது இல்லை என்றால் சரியல்ல. அதில் சாட்சியாக இரண்டு சக்திவேல் கையெழுத்து போட்டுள்ளார்கள். பிரதிவாதி

எதற்காக என்னிடம் கடன் வாங்கினார் என்றால் வீட்டைத் திருப்புவதற்காக கடன் வாங்கினார். நானும், சாட்சிகளும் சேர்ந்து புரோநோட்டை மோசடியாக உற்பத்தி செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மனைவி பழனியம்மாள் இறந்துவிட்டார். பிரதிவாதிக்கு வேறு வாரிசுகள் யாரும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு ரூ.50 லட்சம் பெறுமான வீடு உள்ளது. பிரதிவாதிக்கு சொந்தமான பல லட்சம் பெறக்கூடிய நிலங்கள் உள்ளது என்றால் இல்லை. பிரதிவாதி மற்றும் அவரது மனைவி பேரில் வங்கி கணக்கில் பணம் போட்டு சேமித்து வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். என் மனைவி சுள்ளெறும்பு கிராமத்தைச் சேர்ந்த சரவணன் மனைவி பரிமளாவுக்கு கிரையம் செய்தோம் என்றால் சரியல்ல. அடமானம் வைத்து இருந்தோம். ஒட்டன்சத்திரத்தைச் சேர்ந்த பாரதி என்பவர் மனைவிக்குத் தான் சொத்தை கிரையம் செய்து கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படுவது என் மனைவி பேரில் உள்ள சொத்தை பரிமளாவுக்கு கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லப்படும் கிரைய ஆவணம் என்றால் சரிதான். ஆனால் உண்மையில் கிரையம் செய்து கொடுக்கவில்லை. அடமானம் வைக்கும்போது கிரையமாக எழுதி பதிவு செய்து கொண்டார்கள். அந்த ஆவணம் பிவாசாஆ.1. பிவாசாஆ.1 ல் கிரைய தொகை ரூ.2 லட்சம் காட்டப்பட்டு உள்ளது என்றால் சரிதான். 29.11.2018 ம் தேதி பிவாசாஆ.1 எழுதப்பட்டது என்றால் சரிதான். பிவாசாஆ.1 ல் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். அதே பரிமளாவிற்கு நான் ஒரு கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரையபபத்திரம் என்னிடம் காண்பிக்கப்படுவதாகும். அந்த பத்திரம் பிவாசாஆ.2. பிவாசாஆ.2 ல் கிரைய தொகை ரூ.2 லட்சம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 03.05.2023 ம் தேதி பிவாசாஆ.2 எழுதப்பட்டது என்றால் சரிதான். பிவாசாஆ.1 மற்றும் 2 கிரைய ஆவணங்கள் மூலமாக எனக்கும், என் மனைவிக்கு பாத்தியமான சொத்துக்கள் முழுவதையும் விற்று விட்டோம்

என்றால் சரியல்ல. பகுதியை விற்றுள்ளோம். மீதி சொத்துக்கள் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்பது குறித்து ஆதாரம் தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. வண்டி, வாகனம் என் வசம் உள்ளது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி என்ன கட்சி செய்து வருகிறார் என்பதை தெரிந்து கொண்டேன். ரூ.20 லட்சத்தை பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் அளவுக்கு எனக்கு சொத்து, வருமானம் எதுவும் இல்லை என பிரதிவாதி எதிர்வழக்குரையில் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். ஆனால் அது பொய். அதை மறுத்து பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் பக்கம் 2 ல் சொத்தை பரிமளாவுக்கு விற்று அதன் மூலம் கிடைத்த பணத்தை பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி பழனிவேல் என்பவரிடம் இருந்து சொத்தை கிரையம் வாங்கினார். அப்போது நான் உடன் செல்லவில்லை. என்னிடம் பணத்தை வாங்கிக்கொண்டுபோய் பிரதிவாதி பத்திரம் முடித்த விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். பிரதிவாதி பழனிவேலிடம் இருந்து பெற்றகிரையத்தை எந்த தேதியில் முடித்தார் என்பது தெரியாது. என்னிடம் பணம் பெற்றுச்சென்றபின்னர் எனக்கும் பிரதிவாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. பத்திரம் முடிப்பதற்கு பிரதிவாதியுடன் நான் செல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 3 ல் பிரதிவாதி பழனிவேலிடம் இருந்து பத்திரம் பதிந்து பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யும்போது நானும் உடன் இருந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் அது தவறு. மேலும் பத்தி 6 ல் சொல்லியுள்ளவைகள் சரிதான். பரிமளாவுக்கு கிரையம் செய்வதற்கு முன்னர் என்னிடம் ரூ.20 லட்சம் கிடையாது என்றால் சரிதான். 2018, 2023 வருடத்தில் பரிமளாவுக்கு 2 கிரையப்பத்திரங்கள் மூலம் ரூ.4 லட்சத்துக்குத்தான் விற்றுள்ளோம் என்றால் அரசு வழிகாட்டுதழில் உள்ள தொகையை காட்டியுள்ளோம். பரிமளாவுக்கு சொத்தை விற்று பிரதிவாதிக்கு ரூ.20 லட்சம் கடன் கொடுத்ததாக சொல்வது உண்மைக்கு

புறம்பானது என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் 3 வது பக்கத்தில் ஐந்து ஆவணங்கள் பற்றி சொல்லிஉள்ளேன் என்றால் சரிதான். அவ்வாவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியிடம் மேற்படி கடனை நான் கேட்கவில்லை என்றும் அதற்கு அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் நேரடியாக கேட்டேன். வாதசாஆ.2 அறிவிப்பை பிரதிவாதிக்கு நான் அனுப்பி வைக்கவில்லை என்றும் அதை வாங்க மறுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் பிரதிவாதி பழனிவேலிடம் இருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவண நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவது அவ்வாவணம்தான். அது பிவாசாஆ.3. பிவாசாஆ.3 ல் பிரதிவாதியும் அவரது மனைவியும் 3.12.2020 ம் தேதி வேடசந்தூர் கரூர் வைஸ்யா வங்கி கணக்கிலிருந்து ரூ.19 லட்சத்திற்கான காசோலையை பழனிவேல் என்பவருக்கு கொடுத்து கிரையம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் கடன் வாங்கித்தான் பிரதிவாதி சொத்தை கிரையம் வாங்கினார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு வாரிசுகள் இல்லை என்றும் வயதானவர் என்பறும் அவரிடம் இருந்து பணம் பறிக்க எண்ணிபொய்யான புரோநோட்டை பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடியாகனும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை -இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.12.18 17:31:52 +0530

Principal District Judge,
Dindigul.